ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2070/56 - 2018 මැයි මස 12 වැනි සෙනසුරාදා - 2018.05.12
2070/56 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு**

அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 43 ஆம் உறுப்புரையின் (1) ஆம் உப உறுப்புரையின் வண்ணம் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகித்து, என்னால் 2015, செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதிய 1933/ 13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு காலத்துக்குக்காலம் திருத்தப்பட்ட அறிவித்தலானது 2018, மே மாதம் 12 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு மேலும் திருத்தப்படுகின்றதென்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மைத்திரிபால சிறிசேன,
சனாதிபதி

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2018, மே 12.

**அட்டவணை**

(1) அவ்வறிவித்தலில் "(இல.3) தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சர்" என்ற தலைப்பும் அதன் கீழான நிரல் I, II, III உள்ள விடயங்களை நீக்குவதன்மூலம்;

(2) அவ்வறிவித்தலில் "(இல.4) தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சர்" என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-

(அ) அத்தலைப்பானது "(இல.3) தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சர்" எனவும்

(ஆ) அதன் நிரல் II இல் 5 ஆவது விடயத்தை நீக்குவதன்மூலம்;

(இ) அதன் நிரல் II இல் 6 மற்றும் 7 ஆம் விடயங்களை மீண்டும் இலக்கமிடுவதன்மூலம்;

(ஈ) அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள "8. இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனமும் அதன் துணைக் கம்பனிகளும் இணைந்த கம்பனிகளும் (வரையறுக்கப்பட்ட லிட்ரோ காஸ் இலங்கை கம்பனி தவிர)" என்பது "7. இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனமும் அதன் துணைக் கம்பனிகளும் இணைந்த கம்பனிகளும் (லிட்ரோ காஸ் லங்கா லிமிட்டெட் தவிர)" எனவும்

(உ) அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள "7. இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனமும் அதன் துணைக் கம்பனிகளும் மற்றும் இணைந்த கம்பனிகளும் (லிட்ரோ காஸ் லங்கா லிமிட்டெட் கம்பனி தவிர)" எனும் விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன்மூலம்;
8. இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு

(ஊ) அதன் நிரல் III இல் காட்டப்பட்டுள்ள பின்வரும் விடயத்தை நீக்குவதன்மூலம்;
- (1990 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க) இலங்கை கடன் தகவல் பணியகக் கட்டளைச் சட்டம்

(எ) அதன் நிரல் III இல் காட்டப்பட்டுள்ள "(2016 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க) நுண்நிதிச் சட்டம்" எனும் விடயத்திற்குப் பின்னர் பின்வரும் விடயத்தை சேர்ப்பதன்மூலம்;
- (2002 ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க) இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுச் சட்டம்

(3) அவ்வறிவித்தலில் இல. (5) இலிருந்து (7) வரையான தலைப்புகளை மீண்டும் இலக்கமிடுவதன்மூலம்;

(4) அவ்வறிவித்தலில் "இல. (8) நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்" எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு-

(அ) அத்தலைப்பானது "(இல.7) நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்" எனவும்

(ஆ) அதன் நிரல் I இல் காட்டப்பட்டுள்ள 16 ஆவது விடயத்திற்குப் பின்னர் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன்மூலம்;

17. திணைக்களங்களின் முகாமைத்துவக் கணக்காய்வுகளை மேம்படுத்துவதற்கான வழிகாட்டல்களை வகுத்தமைத்தல்

(இ) அதன் நிரல் I இல் உள்ள விடயங்களை 18 இலிருந்து இலக்கமிடுவதன் மூலம்;

(ஈ) அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள "24. இலங்கைப் பிணையங்கள் மற்றும் செலாவணி ஆணைக்குழு" எனும் விடயத்திற்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலம்;
25. கடன் தகவல் பணியகம்
26. முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம்

(உ) அதன் நிரல் II இல் 34 ஆவது விடயத்தை நீக்குவதன்மூலம்;

(ஊ) அதன் நிரல் II இல் உள்ள விடயங்களை 27 இலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன்மூலம்;

(எ) அதன் நிரல் III இல் காட்டப்பட்டுள்ள "(1997ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க) அபிவிருத்தி லொத்தர் சபைச் சட்டம்" எனும் விடயத்திற்குப் பின்னர் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன்மூலம்;
- (1990 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க) இலங்கை கடன் தகவல் பணியகக் கட்டளைச் சட்டம்

(5) அவ்வறிவித்தலில் "இல. (9) சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சர்" எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு-

(அ) அத்தலைப்பானது "(இல.8) சமூக வலுவூட்டல் அமைச்சர்" எனவும்;

(ஆ) அதன் நிரல் I இல் 1 ஆவது விடயத்தைப் பின்வருமாறு திருத்துவதன்மூலம்;
1. சமூக வலுவூட்டல்கள் விடயத்துடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்கள் தொடர்பான விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்

(இ) அதன் நிரல் I இல் 6 இலிருந்து 13 வரையில் உள்ள விடயங்களை நீக்குவதன்மூலம்;

(ஈ) அதன் நிரல் II இல் 1 இலிருந்து 4 வரையில் உள்ள விடயங்களை நீக்குவதன்மூலம்;

(உ) அதன் நிரல் III இல் காட்டப்பட்டுள்ள பின்வரும் விடயங்களை நீக்குவதன்மூலம்;

- (1907 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க) தடுப்பு இல்லங்கள் கட்டளைச் சட்டம்
- (1939 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க) வறியோர் சட்டக் கட்டளைச் சட்டம்
- (2000 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க) முதியோர் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம்
- (1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க) வலுவிழந்த ஆட்களின் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம்
- (1841 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க) அலைந்துதிரிவோர் கட்டளைச்சட்டம்
- (1992 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க) கட்புலன் இழந்தோர் புனர்வாழ்வளிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டம்

(6) அவ்வறிவித்தலில் "இல. (10) தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சர்" எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு-

(அ) அத்தலைப்பானது "(இல.9) தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர்" எனவும் ;

(ஆ) அதன் நிரல் I இல் 13 மற்றும் 14 ஆகிய விடயங்களை நீக்குவதன்மூலம்;

(இ) அதன் நிரல் I இல் உள்ள 12 ஆவது விடயத்திலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன்மூலம்;

(ஈ) அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள "8. வரையறுக்கப்பட்ட லங்கா ரெக்கியா பியஸ" எனும் விடயத்திற்குப் பின்னர் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன்மூலம்;

9. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

(உ) அதன் நிரல் III இல் காட்டப்பட்டுள்ள "(1956 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க) கட்டணங்களை அறவிடும் முகவராண்மைகள் சட்டம்" எனும் விடயத்திற்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலம்;

- (1993 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க) ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டம்
- (1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க) ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சட்டம்

(7) அவ்வறிவித்தலில் "இல. (11) அரச தொழில்முயற்சிகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சர்" எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு-

(அ) அத்தலைப்பானது "(இல.10) அரச தொழில்முயற்சிகள் மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர்" எனவும்

(ஆ) அதன் நிரல் I இல் 1 மற்றும் 2 ஆவது விடயங்களைப் பின்வருமாறு திருத்துவதன்மூலம் ;

I. அரச தொழில்முயற்சிகள் மற்றும் கண்டி நகர அபிவிருத்தி தொடர்பிலான விடயத்துடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்

II. கண்டி நகரத்தினுள் பொருளாதார மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள், அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களைக் கண்காணிப்புச் செய்தலும் கூட்டிணைப்புச் செய்தலும்

(இ) அதன் நிரல் I இல் 11 ஆவது விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன்மூலம்;
12. சீனிக் கைத்தொழிலுக்குரிய அரச வளங்களின் முகாமைத்துவமும் பாதுகாப்பும்

(ஈ) அதன் நிரல் I இல் உள்ள 13 ஆவது விடயத்திலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன்மூலம்;

(உ) அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள 6 ஆவது விடயத்தை நீக்குவதன்மூலம்;

(ஊ) அதன் நிரல் II இல் 5 இலிருந்து 8 வரையான விடயங்களை மீண்டும் இலக்கமிடுவதன்மூலம்;

(எ) அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள 9 ஆவது விடயத்தைப் பின்வருமாறு திருத்துவதன்மூலம்;
8. லிட்ரோ காஸ் லங்கா லிமிட்டெட்

(ஏ) அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள 8 ஆவது விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன் மூலம் ;
9. லிட்ரோ காஸ் ரர்மினல் லங்கா (தனியார்) கம்பனி

(ஐ) அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள "20. இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம்" எனும் விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலம்;

21. வரை. ஹிங்குரான சீனி கைத்தொழில் கம்பனி
22. வரை. லங்கா சீனி (தனியார்) கம்பனி
23. கந்தளாய் சீனிக் கம்பனி
24. கரும்பு ஆராய்ச்சி நிறுவனம்

(ஒ) அதன் நிரல் III இல் காட்டப்பட்டுள்ள "(1975 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க) இலங்கை அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டம்" எனும் வியத்துக்குப் பின்னர் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன்மூலம்;

• (1981 ஆம் ஆண்டின் 75 ஆம் இலக்க) கரும்பு ஆராய்ச்சி நிறுவனச் சட்டம்

(8) அவ்வறிவித்தலில் "இல. (12 நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர்)" எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு-

(11) நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர்

(9) அவ்வறிவித்தலில் "(இல.13)அனர்த்த முகாமைத்துவ அமைச்சர்" என்ற தலைப்பு மற்றும் அதன் கீழ் நிரல் I, II, III உள்ள விடயங்களை நீக்குவதன்மூலம்;

(10) அவ்வறிவித்தலில் "இல. (14) விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்" எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு-

(அ) (12) அத்தலைப்பானது "12. விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி, திறன்கள் அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சர்" எனவும்

(ஆ) அதன் நிரல் I இல் 1 ஆவது விடயத்தைப் பின்வருமாறு திருத்துவதன்மூலம்;

1. விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி, திறன்கள் அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் கண்டி மரபுரிமைகள் தொடர்பான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடன் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடலும்

(இ) அதன் நிரல் I இல் 9 ஆவது விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலம் ;

10. பாடசாலைக் கல்வியை முடித்தபின் பல்கலைக்கழக கல்விக்காகத் தகைமைபெறாத மாணவர்களுக்கு தொழிற்கல்வி வாய்ப்புகளை விரிவாக்கக்கூடியவாறான கொள்கைகளைத் தயாரித்தலும் வசதிகளை அளித்தலும்

11. தொழிற்சந்தைக்கு ஏற்ற ஊழியர் படையினை உருவாக்குவதற்காக தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்பவியல் கல்வியை நவீனமயப்படுத்துதல்

12. பயிலுநர் பயிற்சி வாய்ப்புகளை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்

13. தொழில்சார் கல்வியை அணுகுவதற்கான ஆர்வத்தை அதிகரிப்பதற்கான திறமுறைகளை ஏற்படுத்துதலும் மற்றும் நடைமுறைப்படுத்தலும்

14. கண்டி மரபுரிமைகளின் பாதுகாப்பு மற்றும் விருத்தி

(ஈ) அதன் நிரல் I இல் உள்ள 15 ஆவது விடயத்திலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன்மூலம்;

(உ) அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள "13. தொழில்நுட்பத் தொழில்நுட்பவியல் நிறுவகம்" எனும் விடயத்திற்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலம்;

14. மூன்றாம்நிலைக் கல்வி மற்றும் வாழ்க்கைத் தொழிற்கல்வி ஆணைக்குழு
15. இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை
16. தேசிய பயிலுநர், கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை
17. வரையறுக்கப்பட்ட திறன்கள் அபிவிருத்தி நிதியம்
18. இலங்கை - ஜேர்மனி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவகம்
19. தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகத்துடன் இணைந்த நிறுவனங்கள்
20. தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகம்
21. இலங்கை அச்சக நிறுவகம்
22. தேசிய கடற்றொழில் மற்றும் கப்பற்றொழில் பொறியியல் நிறுவகம் (கடல்சார் பல்கலைக்கழகம்)
23. தேசிய தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்
24. தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்

(ஊ) அதன் நிரல் III இல் காட்டப்பட்டுள்ள "இலங்கை அடிப்படைக் கற்கைகள் நிறுவகச் சட்டம் (1981 ஆம் ஆண்டின் 55ஆம் இலக்க)" எனும் விடயத்திற்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலம்;

- *(1998 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க) இலங்கை தேசிய தொழில்நுட்பக் கல்வி நிறுவகச் சட்டம்.*
- *(1984ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க) இலங்கை அச்சக நிறுவகச் சட்டம்*
- *(1990ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க) மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்விச் சட்டம்*
- *(1995ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க) இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபைச் சட்டம்*
- *(1976 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க) தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகச் சட்டம்*
- *(2008 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க) தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகச் சட்டம்*
- *(2014 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க) இலங்கைக் கடல்சார் பல்கலைக்கழகச் சட்டம்*

(11) அவ்வறிவித்தலில் இல. (15) மற்றும் இல. (16) ஆகிய தலைப்புகளை மீண்டும் இலக்கமிடுவதன்மூலம்;

(12) அவ்வறிவித்தலில் "(இல.17) திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில்பயிற்சி அமைச்சர்" என்ற தலைப்பு மற்றும் அதன் கீழ் நிரல் I, II, III உள்ள விடயங்களை நீக்குவதன்மூலம்;

(13) அவ்வறிவித்தலில் "இல. (18) உள்நாட்டலுவல்கள் அமைச்சர்" எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு-
(15) உள்நாட்டலுவல்கள் அமைச்சர் எனவும்

(14) அவ்வறிவித்தலில் "இல. (19) உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்" எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு-

(அ) அத்தலைப்பானது "இல. (16) உள்ளக அலுவல்கள் மற்றும் வடமேல் அபிவிருத்தி அமைச்சர்" எனவும்

அதன் நிரல் I இல் 1 ஆவது விடயத்தைப் பின்வருமாறு திருத்துவதன்மூலம்-

1. உள்ளக அலுவல்கள் மற்றும் வடமேல் அபிவிருத்தி தொடர்பான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடலும்

(ஆ) அதன் நிரல் I இல் 7 இலிருந்து 11 வரையான விடயங்களை நீக்குவதன் மூலம்;

(இ) அதன் நிரல் I இல் உள்ள 6 ஆவது விடயத்திலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன்மூலம்;

(ஈ) அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள 3 மற்றும் 4 ஆகிய விடயங்களை நீக்குவதன்மூலம்;

(உ) அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள "2. ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களம்" எனும் விடயத்திற்குப் பின்னர் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன்மூலம்;
3. அரச அச்சகத் திணைக்களம்

(ஊ) அதன் நிரல் III இல் காட்டப்பட்டுள்ள "(1988 ஆம் ஆண்டின் 73 ஆம் இலக்க) கலாசார சொத்துக்கள் சட்டம்" எனும் விடயத்தை நீக்குவதன்மூலம்;

(15) அவ்வறிவித்தலில் "இல. (20) கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சர்" என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-

(அ) அத்தலைப்பானது "இல. (17) கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சர்" எனவும்

(ஆ) அதன் நிரல் I இல் 10 ஆவது விடயத்தை நீக்குவதன்மூலம்;

(இ) அதன் நிரல் I இல் உள்ள 11 ஆவது விடயத்திலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன்மூலம்;

(ஈ) அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள 32 மற்றும் 33 ஆகிய விடயங்களை நீக்குவதன்மூலம்;

(உ) அதன் நிரல் II இல் உள்ள 34 ஆவது விடயத்திலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன்மூலம்;

(16) அவ்வறிவித்தலில் "இல. (21) மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்" என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-
(18) மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்

(17) அவ்வறிவித்தலில் "இல. (22) கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்" என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-

(அ) அத்தலைப்பானது "இல. (19) கடற்றொழில், நீரக வளமூல அபிவிருத்தி மற்றும் கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சர்" எனவும்

(ஆ) அதன் நிரல் I இல் 1 ஆவது விடயத்தைப் பின்வருமாறு திருத்துவதன்மூலம்

1. கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி மற்றும் கிராமியப் பொருளாதார அலுவல்கள் தொடர்பிலான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்

(இ) அதன் நிரல் I இல் 12 ஆவது விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலம்;

13. கிராமிய வாழ்வாதார அபிவிருத்திக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்
14. பிரதேச மற்றும் கிராமிய அபிவிருத்திக் கொள்கைகள் மற்றும் உபாயவழிமுறைகளின் அபிவிருத்தி
15. கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சிறிய தொழில்முயற்சிகளின் அபிவிருத்தி அலுவல்கள்
16. கிராமிய பொருளாதார அலுவல்களுக்காக நிதி உதவிகளை வழங்குதல்
17. கால்நடை வளப்பிரிவு உற்பத்தியினை அதிகரிப்பதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்தல்
18. கால்நடை நலனோம்புகை மற்றும் அதனுடன் தொடர்புடைய அலுவல்கள்
19. கால்நடை வளங்கள் சார்நத உற்பத்திகளை மேம்படுத்தல், பிரசாரம் செய்தல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
20. நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதன்மூலம் கால்நடை வளங்கள் சம்பந்தமான ஆராய்ச்சிப் பிரிவினை விரிவாக்கல் மற்றும் அதன் பிரதிபலன்களின் அடிப்படையிலான உற்பத்தித்துறையின் தரரீதியானதும் அளவுரீதியிலானதுமான விருத்திக்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல்
21. கால்நடைத் துறையில் விலங்குகளின் எண்ணிக்கையினை அதிகரிப்பதற்குத் தேவையான விஞ்ஞான முறையிலான இனப்பெருக்க முறைகளை பிரபல்யப்படுத்துதல் மற்றும் அவ்விலங்குகளை நோய்த் தாக்கத்திலிருந்து பாதுகாத்தலும் தொற்றுத் தடைக்காப்பும்

(ஈ) அதன் நிரல் I இல் உள்ள 22 ஆவது விடயத்திலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன்மூலம்;

(உ) அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள "6. தேசிய நீரக வளமூலங்கள் அபிவிருத்தி நிறுவனம்" எனும் விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலம்;

7. கிராமிய புத்துயிரூட்டல் நிதியம்
8. கிராமிய பொருளாதார புத்துயிரூட்டல் நிதியம் (நிதிசார்)
9. ஜனதிரிய நிதியம் (கிராமோதய சபை நிதியம்)
10. கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்
11. தேசிய கால்நடைவளங்கள் அபிவிருத்திச் சபையும் இணைக் கம்பனிகளும்
12. வரையறுக்கப்பட்ட கிரியா/மில்க் இன்டஸ்ரீஸ் லங்கா (பிறைவேட்) கம்பனி
13. மில்க் இன்டஸ்ரீஸ் லங்கா கம்பனி
14. வரையறுக்கப்பட்ட மகாவலி லைவ்ஸ்ரொக் என்ரபிரய்ஸ் கம்பனி
15. பிரதேச பொருளாதார மத்திய நிலையங்கள்

(ஊ) அதன் நிரல் III இல் காட்டப்பட்டுள்ள "(1981ஆம் ஆண்டின் 54ஆம் இலக்க) தேசிய நீரக வளமூலங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மைச் சட்டம்" எனும் விடயத்திற்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலம்;

- (1982 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க) கிராமோதய சபைச் சட்டம்
- (1992ஆம் ஆண்டின் 59ஆம் இலக்க) விலங்கு நோய்ச் சட்டம்
- (1986ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க) விலங்கு தீனிச் சட்டம்
- (1958ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க) விலங்குகள் சட்டம்
- (1956 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க) விலங்கு மருத்துவ மற்றும் விலங்கு மருத்துவத் தொழில்துறைச் சட்டம்

(18) அவ்வறிவித்தலில் “இல. (23) பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்” என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-

(அ) அத்தலைப்பானது “இல(20) பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்” எனவும்

(ஆ) அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள 13 ஆவது விடயத்தை நீக்குவதன்மூலம்;

(இ) அதன் நிரல் II இல் உள்ள 12 ஆவது விடயத்திலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன்மூலம்;

(ஈ) அதன் நிரல் III இல் காட்டப்பட்டுள்ள பின்வரும் விடயத்தை நீக்குவதன்மூலம்;
- கரும்பு ஆராய்ச்சி நிறுவனச் சட்டம் (1981ஆம் ஆண்டின் 75ஆம் இலக்க)

(19) அவ்வறிவித்தலில் “இல. (24) மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர்” என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு-
“(22) மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர்” எனவும்

(20) அவ்வறிவித்தலில் “இல. (25) கமத்தொழில் அமைச்சர்” என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு-

(அ) அத்தலைப்பானது “இல. (22) கமத்தொழில் அமைச்சர்” எனவும்

(ஆ) அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள 13. வரை. லங்கா பொஸ்பேட் கம்பனி எனும் விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலம்;
14. நெல் சந்தைப்படுத்தல் சபை
15. தேசிய கமத்தொழில் பல்வகைப்படுத்துகையும், குடியேற்ற அதிகாரசபையும் (ஹதபிம)

(இ)
- அதன் நிரல் III இல் காட்டப்பட்டுள்ள (2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க) கமநல அபிவிருத்திச் சட்டம்” எனும் விடயத்திற்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலம்;
- (1971 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க) நெல் சந்தைப்படுத்தல் சபை சட்டம்
- (1978 ஆம் ஆண்டின் 11 இலக்க) கமத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டம்

(21) அவ்வறிவித்தலில் “(இல.26) வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சர்” என்ற தலைப்பும் அதன் கீழ் நிரல் I, II, III உள்ள விடயங்களை நீக்குவதன்மூலம்;

(22) அவ்வறிவித்தலில் “இல. (27) நீதி அமைச்சர்” என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு-

(அ) அத்தலைப்பானது “இல. (23) நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர்” எனவும்

(ஆ) அதன் நிரல் I இல் 1 ஆவது விடயத்தைப் பின்வருமாறு திருத்துவதன்மூலம்
1. நீதி நிருவாகத்தை நிர்வகிக்கும் பொறிமுறை மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு பற்றிய விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடன் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்

(இ) அதன் நிரல் I இல் 12 ஆவது விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலம்;
13. சிறைச்சாலைகள் மறுசீரமைப்புக்குரிய கொள்கைகளையும், திட்டங்களையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்தலும்
14. சிறைச்சாலை நிருவாகமும் மறுசீரமைப்பும்
15. சமுதாய சீர்திருத்தக் கருத்திட்டங்கள் தொடர்பான அலுவல்கள்

(ஈ) அதன் நிரல் I இல் உள்ள 16 ஆவது விடயத்திலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன்மூலம்;

(உ) அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள “13. இலங்கை சர்வதேச நடுத்தீர்ப்பு நிலையம்” எனும் விடயம்
13. ஸ்ரீ லங்கா இன்ரநஷனல் ஆர்பிறேஷன் சென்டர் (கரன்டி) லிமிட்டெட் எனவும்

(ஊ) அதன் நிரல் II இல் 13 ஆவது விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலம்;
14. சிறைச்சாலைகள் திணைக்களம்
15. சமூக அடிப்படையிலான சீர்திருத்தத் திணைக்களம்
16. இளந்தவறாளிகளுக்கான பயிற்சிப் பாடசாலைகள்

(எ) • அதன் நிரல் III இல் காட்டப்பட்டுள்ள "(2000 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க) இலங்கை வாணிப மத்தியஸ்த நிலையச் சட்டம்" எனும் விடயத்திற்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலம்;

- (1877ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க) சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டம்
- (1939 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க) இளந்தவறாளர்கள் (பயிற்சிப் பாடசாலைகள்) சட்டம்

(23) அவ்வறிவித்தலில் "(இல. 28) கிராமிய பொருளாதாரம் பற்றிய அமைச்சர்" என்ற தலைப்பு மற்றும் அதன் கீழ் நிரல் I, II, III உள்ள விடயங்களை நீக்குவதன்மூலம்;

(24) அவ்வறிவித்தலில் "இல. (29) உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்" என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு-

(அ) அத்தலைப்பானது "இல. (24) நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சர்" எனவும்

(ஆ) அதன் நிரல் I இல் 1 ஆவது விடயத்தைப் பின்வருமாறு திருத்துவதன்மூலம்

1. நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்களின விடயங்களுடன் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்

(இ) அதன் நிரல் I இன் 2 இலிருந்து 6 வரையான விடயங்களை நீக்குவதன்மூலம்;

(ஈ) அதன் நிரல் I இன் 7 ஆவது விடயத்திலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன்மூலம்;

(உ) அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள 1 இலிருந்து 5 வரையான விடயங்களை மற்றும் 8 ஆம் விடயத்தை நீக்குவதன்மூலம்;

(ஊ) அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள விடயங்களை மீண்டும் இலக்கமிடுவதன்மூலம்;

(எ) அதன் நிரல் III இல் காட்டப்பட்டுள்ள பின்வரும் விடயங்களை நீக்குவதன்மூலம்;

- (1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க) பல்கலைக்கழகச் சட்டம்
- (1996ஆம் ஆண்டின் 26ஆம் இலக்க) புத்த சிராவக்க பிக்கு பல்கலைக்கழகச் சட்டம்
- (1981ஆம் ஆண்டின் 74ஆம் இலக்க) இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகச் சட்டம்
- (1995 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க) இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்விச் சட்டம்

(25) அவ்வறிவித்தலில் "(இல. 30) அரச நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர்" என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு-

(அ) அத்தலைப்பானது "இல. (25) அரச நிருவாக, முகாமைத்துவ மற்றும் சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சர்" எனவும்

(ஆ) அதன் நிரல் I இல் 1 ஆவது விடயத்தைப் பின்வருமாறு திருத்துவதன்மூலம்

1. அரச நிருவாக முகாமைத்துவ மற்றும் சட்டமும் ஒழுங்கும் தொடர்பான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் மதிப்பிடுதலும் தொடராய்வு செய்தலும் கண்காணித்தலும்

(இ) அதன் நிரல் I இல் 11 ஆவது விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலம்;

12. சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுதல்
13. சமூக ஒழுக்கத்தை உறுதிப்படுத்தும் விரிவான சீர்திருத்தங்களையுடைய உபாயமார்க்கங்களை நடைமுறைப்படுத்துதல்
14. தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் ஆலோசனையின்படி பொலிஸ் சேவையின் வினைத்திறனை மேம்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்
15. சமூகச் சீரழிவாக மாறியுள்ள பல்வேறான குற்றங்கள் மற்றும் சமூக விரோத செயற்பாடுகளைத் தடுப்பதற்கும் தவிர்ப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல்
16. வாகனப் போக்குவரத்துக் கட்டுப்பாடு
17. அபாயகர ஔடதங்களின் பாவனையின் தடுப்பும் கட்டுப்பாடும்

(ஈ) அதன் நிரல் I இல் உள்ள 18 ஆவது விடயத்திலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன்மூலம்;

(உ) அதன் நிரல் II இல் 6 இலிருந்து 8 வரையான விடயங்களை நீக்குவதன்மூலம்;

(ஊ) அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள 5. உற்பத்தித்திறன் செயலகம் என்ற விடயமானது
5. தேசிய உற்பத்தித்திறன் செயலகம் எனவும்

(எ) அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள 5 ஆம் விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலம்;

6. பொலிஸ் திணைக்களம்

7. தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை

(ஏ) அதன் நிரல் III இல் காட்டப்பட்டுள்ள பின்வரும் விடயங்களை நீக்குவதன்மூலம்;
- "(1971 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க) அரச திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டம்"
- (1968 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க) அரச அச்சகக் கூட்டுத்தாபனம்

(ஐ)
- அதன் நிரல் III இல் காட்டப்பட்டுள்ள "(1957 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க) பரிசளிப்பப் போட்டிச் சட்டம்" எனும் விடயத்திற்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலம்;
- (1865 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க) பொலிஸ் கட்டளைச் சட்டம்
- (2008 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க) போதையூட்டும் ஔடதங்களினதும் உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்களினதும் சட்டமுரணான வியாபாரத்திற்கு எதிரான சமவாயங்கள் சட்டம்
- (2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க) ஔடதங்களுக்கு அடிமையான ஆட்கள் (சிகிச்சை அளித்தலும் புனர்வாழ்வளித்தலும்) பற்றிய சட்டம்
- (1984 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க) தேசிய அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபைச் சட்டம்
- (1939 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க) இளந்தவறாளர்கள் (பயிற்சிப் பாடசாலைகள்) சட்டம்

(26) அவ்வறிவித்தலில் "(இல.31) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்" என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு-
(26) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்

(27) அவ்வறிவித்தலில் "(இல.32) வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர்" என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு-

(அ) அத்தலைப்பானது "இல. (27) வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர்" எனவும்

(ஆ) அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள "12. தேசிய இயந்திரப் பொறிசார் நிறுவனம்" எனும் விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன்மூலம்;

13 வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்

(இ) அதன் நிரல் III இல் காட்டப்பட்டுள்ள "(2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க) நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டம்" என்ற விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலம்;
- (1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க) வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்

(28) அவ்வறிவித்தலில் இல. (33) இலிருந்து இல. (35) வரையான தலைப்புகளை மீண்டும் இலக்கமிடுவதன்மூலம்;

(29) அவ்வறிவித்தலில் "(இல.36) கல்வி அமைச்சர்" என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு-

(அ) அத்தலைப்பானது "இல. (31) கல்வி அமைச்சர்" எனவும்

(ஆ) அதன் நிரல் I இல் 17 இலிருந்து 20 வரையான விடயங்களை நீக்குவதன்மூலம்;

(இ) அதன் நிரல் I இல் 21 ஆவது விடயத்திலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன்மூலம்;

(ஈ) அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள 12 இலிருந்து 20 வரையான விடயங்களை நீக்குவதன்மூலம்;

(உ) அதன் நிரல் II இல் "11. பிரிவெனா கல்விச் சபை" எனும் விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன்மூலம்;
12. அரச அச்சகக் கூட்டுத்தாபனம்

(ஊ) அதன் நிரல் III இல் காட்டப்பட்டுள்ள பின்வரும் விடயங்களை நீக்குவதன்மூலம்;

- (1978 ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க) டவர் மண்டப அரங்கு நிதியச் சட்டம்
- (1952 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க) இலங்கை கலைச் சபைப் பேரவைச் சட்டம்
- சீகிரியா மரபுரிமை மன்றச் சட்டம் (1998 ஆம் ஆண்டின் 62 ஆம் இலக்க)
- (1940 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க) தொல்பொருளியல் கட்டளைச் சட்டம்
- தேசிய சுவடிக்காப்புச் சட்டம் (1973 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க)
- (1980 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க) மத்திய கலாச்சார நிதியச் சட்டம்

(எ) அதன் நிரல் III இல் காட்டப்பட்டுள்ள (1999ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க) யுனெஸ்கோ புலமைப் பரிசில் நிதியச் சட்டம் எனும் விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன்மூலம்;

- (1968 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க) அரச அச்சகக் கூட்டுத்தாபனக் சட்டம்

(30) அவ்வறிவித்தலில் "(இல.37) தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சர்" என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு-
(32) தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சர் எனவும்

(31) அவ்வறிவித்தலில் "(இல.38) சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சர்" என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு-

(அ) அத்தலைப்பானது "இல. (33) மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சர்" எனவும்

(ஆ) அதன் நிரல் I இல் 1 ஆவது விடயத்தைப் பின்வருமாறு திருத்துவதன்மூலம்
1. மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்து மத அலுவல்கள் தொடர்பிலான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் என்பவற்றின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடலும்

(இ) அதன் நிரல் I இல் 2 இலிருந்து 4 வரையான விடயங்களை நீக்குவதன் மூலம்;

(ஈ) அதன் நிரல் I இல் 5 ஆவது விடயத்திலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன்மூலம்;

(உ) அதன் நிரல் II இல் 1 இலிருந்து 2 வரையான விடயங்களை நீக்குவதன் மூலம்;

(ஊ) அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள 3 ஆவது விடயத்திலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன்மூலம்;

(எ) அதன் நிரல் III இல் காட்டப்பட்டுள்ள பின்வரும் விடயத்தை நீக்குவதன் மூலம்;

- (1877ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க) சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டம்

(32) அவ்வறிவித்தலில் "(இல. 39) பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர்" என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு-
(34) பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர்

(33) அவ்வறிவித்தலில் "(இல. 40) விளையாட்டுத்துறை அமைச்சர்" என்ற தலைப்பும் அதன் கீழ் நிரல் I, II, III இல் உள்ள விடயங்களை நீக்குவதன்மூலம்;

(34) அவ்வறிவித்தலில் "(இல. 41) கருத்திட்ட முகாமைத்துவம், இளைஞர் அலுவல்கள், மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சர்" என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு-

(அ) அத்தலைப்பானது "இல. (35) இளைஞர் அலுவல்கள், கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சர்" எனவும்

(ஆ) அதன் நிரல் I இல் 1 ஆவது விடயத்தைப் பின்வருமாறு திருத்துவதன்மூலம்
1. இளைஞர் அலுவல்கள், கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் தென் அபிவிருத்தி தொடர்பிலான விடயத்துடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடலும்

(இ) அதன் நிரல் II இல் 10 மற்றும் 12 ஆகிய விடயங்களை நீக்குவதன்மூலம்;

(ஈ) அதன் நிரல் II இல் 9 ஆவது விடயத்திலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன்மூலம்;

(உ) அதன் நிரல் III இல் காட்டப்பட்டுள்ள பின்வரும் விடயத்தை நீக்குவதன் மூலம்;

- (1993 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க) ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டம்
- (1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க) ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சட்டம்
- (2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க) இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுச் சட்டம்

(35) அவ்வறிவித்தலில் "(இல. 42) தொலைத்தொடர்புகள், டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சர்" என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு-

(36) தொலைத்தொடர்புகள், டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சர்" எனவும்

(36) அவ்வறிவித்தலில் "(இல. 43) தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர்" என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு-

(அ) அத்தலைப்பானது "இல. (37) தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர்" எனவும்

(ஆ) அதன் நிரல் I இல் 2 ஆவது விடயத்திற்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலம்;

3. நாட்டினுள் ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்தையும் நிலைக்கும் சமாதானத்தையும் மேம்படுத்துதல்
4. தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கம் தொடர்பான தேசியக் கொள்கையொன்றைத் தயாரித்தல்
5. தேசிய ஒருமைப்பாட்டுக்கு அழுத்தம் செலுத்தும் தடைகளை இனமறிதல் மற்றும் தொடர்புடைய தரப்புகளுடன் இடம்பெறும் கலந்துரையாடல்கள் மற்றும் பேச்சுக்களின் அடிப்படையில் கொள்கைரீதியான நடவடிக்கை எடுத்தல்.
6. தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கம் தொடர்பாகப் பணியாற்றும் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுடன் ஒத்துழைத்து செயலாற்றுதலும் அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் இடையில் பிரச்சினைகள் இருப்பின் அவற்றை நிவர்த்தி செய்தலும்
7. தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கம் பற்றி தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றதும் வருங்காலத்தில் நடைமுறைப்படுத்த உள்ளதுமான பொருத்தமான பல்வகைப்பட்ட உபாயமுறைகளை மீளாய்வு செய்தலும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தலையிடுதலும்.
8. வெளிக்கள ரீதியில் நடைமுறைப்படுத்தப்படும் தொடர்புடைய நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைக் கண்காணித்தலும் மதிப்பிடுதலும்
9. மேற்குறிப்பிட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களுக்காகத் தேவைப்படுமாயின் நிதிகளுக்குப் பொருத்தமான திறமுறைகளைக் கண்டறிதல்

(ஆ) அதன் நிரல் I இல் 10 ஆவது விடயத்திலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன்மூலம்;

(37) அவ்வறிவித்தலில் "(இல. 44) ஆரம்பக் கைத்தொழில் அமைச்சர்" என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு-

(அ) அத்தலைப்பானது "இல. (38) சமூக நலன்புரி மற்றும் ஆரம்பக் கைத்தொழில் அமைச்சர்" எனவும்

(ஆ) அதன் நிரல் I இல் 1 ஆவது விடயத்தைப் பின்வருமாறு திருத்துவதன்மூலம்

1. சமூகநலன்புரி மற்றும் ஆரம்பக் கைத்தொழில் தொடர்பிலான நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களத்திற்குரிய கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடலும்

(இ) அதன் நிரல் I இல் 6 ஆவது விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலம்;

7. விசேட தேவையுடையவர்களின் இயலாமை நிலைமைகளை முற்கூட்டியே இனங்காணல், அது தொடர்பில் தலையிடுதல், புனர்வாழ்வளித்தல்

8. மக்கள் உதவித்தொகை திட்டங்களை மீளாய்வு செய்தலும் மீள்ஏற்பாடு செய்தலும் தகுந்த சீர்திருத் தங்களை அறிமுகப்படுத்தலும்
9. சயரோகம்,சிறுநீரக நோய்,தொழுநோய், புற்றுநோய், தெலிசீமியா போன்ற நோய்களால் பீடிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களில் தங்கிவாழ்வோருக்கும் உதவுதல
10. குடும்ப ஆலோசனை சேவைகளை நடைமுறைப்படுத்துதல்
11. வலதுகுறைந்த ஆட்களுக்குத் தொழில் பயிற்சியளித்தலும், வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துவதற்காக தேவையான உபாயமுறைகளைத் திட்டமிடுதலும்
12. வலதுகுறைந்த ஆட்களுக்கான சமூகக் காப்புறுதித் திட்டங்களைச் செயற்படுத்துதல்

13. வயதுமுதிர்ந்த ஆட்களின் நலக் கவனிப்பும் சமூக அபிவிருத்திப் பணிகளில் முதியோரின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்தலும் சிரேட்ட பிரசைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதங்கான நடவடிக்கைகளை எடுத்தலும்

(ஈ) அதன் நிரல் I இல் 14 ஆவது விடயத்திலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன்மூலம்;

(உ) அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள 3 ஆவது விடயத்தை நீக்குவதன்மூலம்;

(ஊ) அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள "2. பலசரக்குப்பொருட்கள் மற்றும் அது சார்ந்த உற்பத்திகளைச் சந்தைப்படுத்தும் சபை" எனும் விடயத்திற்குப் பின்னர் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன்மூலம்;

3. சமூக சேவைகள் திணைக்களம்
4. வயது முதிர்ந்த ஆட்களுக்கான தேசிய மன்றமும் தேசிய வயது முதிர்ந்தோர் செயலகமும்
5. வலதுகுறைந்த ஆட்களுக்கான தேசிய பொதுச் செயலகம்
6. வலதுகுறைந்த ஆட்களுக்கான தேசிய மன்றம்

(எ) அதன் நிரல் III இல் காட்டப்பட்டுள்ள "(1992 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க) ஏற்றுமதிக் கமத்தொழில் அபிவிருத்திச் சட்டம்" எனும் விடயத்திற்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலம்;

- (1907 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க) தடுப்பு இல்லங்கள் கட்டளைச் சட்டம்
- (1939 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க) வறியோர் சட்ட கட்டளைச் சட்டம்
- (2000 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க) முதியோர் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம்
- (1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க) வலுவிழந்த ஆட்களின் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம்
- (1841 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க) அலைந்துதிரிவோர் கட்டளைச்சட்டம்
- (1992 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க) கட்புலன் இழந்தோர் புனர்வாழ்வளிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டம்

(38) அவ்வறிவித்தலில் "(இல.45) நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சர்" என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு-

(அ) அத்தலைப்பானது "இல. (39) நீர்ப்பாசன, நீரகவளமூலங்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர்" எனவும்

(ஆ) அதன் நிரல் I இல் 1 ஆவது விடயத்தைப் பின்வருமாறு திருத்துவதன்மூலம்

1. " நீர்ப்பாசன, நீரகவளமூல முகாமைத்துவம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர்" தொடர்பிலான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடலும்

(இ) அதன் நிரல் I இல் 11 ஆவது விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலம்;

12. இயற்கை அனர்த்தங்களையும் மனிதனால் விளைவிக்கப்படும் அனர்த்தங்களையும் தணித்தல், பதிலளித்தல், மீளமைத்தல் மற்றும் நிவாரணம் அளித்தல் தொடர்பான அலுவல்களைக் கூட்டிணைத்தலும் முகாமை செய்தலும்

13. தேசிய கொள்கையின் அடிப்-படையிலான தேசிய அனர்த்த முகாமைத்துவத் திட்டத்தையும் தேசிய திடீர் அனர்த்த நடவடிக்கைத் திட்டத்தையும் வகுத்தமைத்தல்

14. அனர்த்தங்களைத் தணித்தல், பதிலளித்தல், மீட்பு பற்றிய வெளிநாட்டு உதவிக் கருத்திட்டங்களை ஆரம்பித்தலும் கூட்டிணைத்தலும்

15. மேற்போந்த செயற்பணிகள் உரிய காலத்தில் செயற்படுத்தப்படுவதை உறுதிசெய்துகொள்ளும் பொருட்டு அமைச்சுக்கள், அரசாங்க நிறுவனங்கள், முகவராண்மைகள், தனியார் நிறுவனங்கள், உள்நாட்டு வெளிநாட்டு அரச சார்பற்ற அமைப்பாண்மைகளுடன் ஒருங்கிணைந்து செயலாற்றல்

16. சுற்றாடல் ரீதியான அனர்த்தங்களுக்கு முகம்கொடுக்கக் கூடியவகையில் தொழில்நுட்பத் தரவுகளைக்கொண்ட வீடமைப்புக்களை ஊக்குவித்தல்

17. வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை ஆகியவற்றுக்குத் தகுந்த தொழில்நுட்பத்துடன் தொடர்பான ஆராய்ச்சிகளையும் அபிவிருத்திப் பணிகளையும் ஊக்குவித்தல்

18. வளிமண்டலவியல் அளவைகளும் ஆராய்ச்சிகளும்

19. இயற்கை அனர்த்தங்கள்பற்றி முன்னெச்சரிக்கை செய்தலும் அது தொடர்பான பிரிவுகளை அறிவுறுத்தலும்

20. இயற்கை அனர்த்தங்கள் மற்றும் மனிதனால் இழைக்கப்படும் அனர்த்தங்கள்பற்றி அறிவுறுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களைக் கூட்டிணைத்தல்

21. இயற்கைகை அனர்த்தங்கள் மற்றும் மனிதனால் இழைக்கப்படும் அனர்த்தங்களின்போது மீட்பு நடவடிக்கைகளைச் செயற்படுத்துதல்

22. சர்வதேச மனிதாபிமான உதவிச் சேவைகளை வழங்குதல்

(ஈ) அதன் நிரல் I இல் 23 ஆவது விடயத்திலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன்மூலம்;

(உ) அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள “3. கங்கைப் பள்ளத்தாக்கு மூங்கில் செய்கைக் கருத்திட்டம்” எனும் விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலம்;

4. அனர்த்த முகாமைத்துவ தேசிய மன்றம்
5. அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம்
6. தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம்
7. வளிமண்டலவியல் திணைக்களம்.
8. தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி அமைப்பு

(ஊ) அதன் நிரல் III இல் காட்டப்பட்டுள்ள “(1964 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க) நீர்வளங்கள் சபைச் சட்டம்” எனும் விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன்மூலம்;

- (2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க) இலங்கை அனர்த்த முகாமைத்துவச் சட்டம்

(39) அவ்வறிவித்தலில் “(இல. 46) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்”

என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு-

(அ) அத்தலைப்பானது “இல. (40) மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்” எனவும்

(ஆ) அதன் நிரல் I இல் 1 ஆவது விடயத்தைப் பின்வருமாறு திருத்துவதன்மூலம்

1. மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை ஆகிய விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் தொடராய்வு மதிப்பிடலும்

(இ) அதன் நிரல் I இல் 7 ஆவது விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலம்;

8. விளையாட்டுத்துறையை ஊக்குவிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்தலும் விளையாட்டுத்துறைக்குள் உத்தேச இலக்குகளை அடைந்து கொள்வதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தலும்
9. விளையாட்டுத்துறைக் கல்வியினை ஊக்குவித்தல்
10. இலங்கை பற்றிய பிரதிமையை சர்வதேச ரீதியிலே கட்டியெழுப்புவதற்காக விளையாட்டுத்துறையினை பயன்படுத்தக் கூடியவாறான புதிய திறமுறைகளை வகுத்தமைத்தலும் உரிய நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தலும்
11. பொதுமக்களுடைய தேகாரோக்கிய நலனை ஏற்படுத்துவதற்கு அவசியமான வசதிகளை ஊக்குவித்தலும் கூட்டிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலும்

(ஈ) அதன் நிரல் I இல் 12 ஆவது விடயத்திலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன்மூலம்;

(உ) அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள “2. உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியங்கள்” எனும் விடயத்திற்குப் பின்னர் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன்மூலம்;

3. விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களம்
4. சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி அதிகாரசபை
5. தேசிய விளையாட்டுத்துறை கற்கை நிறுவகம்
6. தேசிய விளையாட்டுத்துறை மன்றம்
7. விளையாட்டுத்துறை மருத்துவ நிறுவகம்
8. இலங்கையின் ஊக்கமருந்துப் பொருட்களைத் தடுப்பதற்கான முகவராண்மை நிறுவனம்

(ஊ) அதன் நிரல் III இல் காட்டப்பட்டுள்ள (1988 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க) மாகாண சபைகள் (சம்பளம் மற்றும் படிக் கொடுப்பனவு) சட்டம்

எனும் விடயத்திற்குப் பின்னர் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன்மூலம்;

- (1973ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க) விளையாட்டுத்துறைச் சட்டம்
- (1999ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க) சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகாரசபைச் சட்டம்
- (2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க) விளையாட்டு நடவடிக்கைகளின்போது ஊக்கமருந்துப் பொருட்களைப் பயன்படுத்துவதற்கு எதிரான இணக்கப்பாட்டுச் சட்டம்

(40) அவ்வறிவித்தலில் “(இல.47) அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்” என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு-

(41) அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்

(அ) அதன் நிரல் I இல் 11 ஆவது விடயத்தை நீக்குவதன்மூலம்;

(ஆ) அதன் நிரல் II இல் 4 ஆவது விடயத்தை நீக்குவதன்மூலம்;

(இ) அதன் நிரல் III இல் (1981 ஆம் ஆண்டின் 66 ஆம் இலக்க) மகாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் சட்டத்தை நீக்குவதன்மூலம்;

(41) அவ்வறிவித்தலில் “(இல. 48) விசேட பணிப்பொறுப்பு அமைச்சர்” என்ற தலைப்பு மற்றும் அதன் கீழ் நிரல் I, II, III உள்ள விடயங்களை நீக்குவதன்மூலம்;

(42) அவ்வறிவித்தலில் “(இல. 49) பிரதேச அபிவிருத்தி அமைச்சர்” என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு-

(அ) அத்தலைப்பானது “இல. (42) வலுவாதார அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சர்” எனவும்

(ஆ) அதன் நிரல் I இல் 1 ஆவது விடயத்தைப் பின்வருமாறு திருத்துவதன்மூலம்

1. வலுவாதார அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி தொடர்பான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடன் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்

(இ) அதன் நிரல் I இல் 3 ஆவது விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலம்;

4. சுற்றாடல் ரீதியான மாற்றங்கள் மற்றும் மிகக்குறைந்த அளவிலான காபன் பாவனையைக்கொண்ட பொருளாதார ரீதியான வலுவாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக வேண்டிய சட்டங்களையும் உபாயவழி முறைகளையும் வகுத்தமைத்தல்

5. வலுவாதார அளவைகளையும் சுற்றாடல் சார்நத குறிகாட்டிகளையும் தயாரித்தல்

6. வலுவாதார அபிவிருத்திக்கான செயலகங்களை அமைத்தல்

7. இலங்கையின் மரஞ்செடிகளைப் பேணுதலும் தாவரவியல் பூங்காக்களைப் பராமரித்தலும் பூச்செடி பயிர்ச் செய்கையை ஊக்குவித்தலும்

8. மிருகங்கள், பறவைகள் மற்றும் ஊர்வன ஆகிய பல்வேறு விலங்குகளை ஒன்றுசேர்த்தலும் காட்சிப்படுத்தலும் என்பவற்றுடன் சம்பந்தப்பட்ட அலுவலகங்கள்

9. வனசீவராசிகள் வளங்களைப் பேணுதல்

10. வனசீவராசிகளின் பாதுகாப்பு பிரதேசங்களில் சுற்றுலாக்கைத்தொழிலை ஊக்குவிக்கும்போது சுற்றாடல் முறைமை பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்தத் தேவையான நடவடிக்கை எடுத்தல்

(ஈ) அதன் நிரல் I இல் 11 ஆவது விடயத்திலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன்மூலம்;

(உ) அதன் நிரல் II இல் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலம்;

1. தேசிய மிருகக்காட்சிச்சாலை திணைக்களம்

2. தேசிய தாவரப் பூங்கா திணைக்களம்

3. வனவிலங்குகள் பாதுகாப்புத் திணைக்களம்

4. வனசீவராசிகள் நம்பிக்கைப்பொறுப்பு

(ஊ) அதன் நிரல் III இல் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலம்;

- (1982 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க) தேசிய மிருகக்காட்சிச்சாலைச் சட்டம்
- (1928 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க) தாவரப் பூங்கா கட்டளைச் சட்டம்
- (1937 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க) தாவர, வனவிலங்கின பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்

(43) அவ்வறிவித்தலில் "(இல. 50) சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சர்" என்ற தலைப்பும் அதன் கீழ் நிரல் I, II, III உள்ள விடயங்களை நீக்குவதன்மூலம்;

(44) அவ்வறிவித்தலில் "(இல. 50) சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சர்" என்ற தலைப்பில் நிரல் I, II, III இற்குப் பின்னர், பின்வரும் புதிய தலைப்பையும் I, II, III ஆகிய நிரல்களையும் விடயங்களையும் சேர்ப்பதன்மூலம்மூலம்;

*(45)* *உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்*

**நிரல் I**

**கடமைகளும் பணிகளும்**

1. உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் தொடர்பான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடன் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடலும்
2. இலங்கையில் உயர்கல்வியின் பண்புத் தரத்தை முன்னேற்றும் நோக்குடன் சர்வதேச கல்வி நிறுவனங்கள் மற்றும் ஏனைய அமைப்பாண்மைகளுடன் இணைதலும் ஒத்துழைப்பை மேம்படுத்தலும்
3. உயர்கல்விக்குரிய அணுகுமுறைகளை விரிவுபடுத்தலுக்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
4. தொழில் சந்தைக்குப் பொருத்தமான பட்டதாரிகளை உருவாக்குவதற்கு பல்கலைக்கழக முறைமையை வலுப்படுத்துவதற்குத் தேவையான கொள்கைரீதியான திருத்தங்களை மேற்கொள்ளுதலும் அதற்குத் தேவையான மனிதவளங்களைப் பெற்றுக் கொடுத்தலும்
5. இலங்கை உயர்கல்வி நிறுவனங்களினால் வழங்கப்படும் பட்டப் பாட நெறிகளுக்கான சர்வதேச மட்ட அங்கீகாரம் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
6. பௌத்த மற்றும் பாளி கல்வியினை மேம்படுத்தலும், பிக்குமார்களின் உயர்கல்வி நடவடிக்கைகளுக்கு அவசியமான வசதிவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தலும்
7. இளைஞர் சமூகத்தினருக்கு உயர்கல்வி வசதிகளை வழங்குதல்
8. இலங்கையின் தேசிய கலாசாரத்தின் அனைத்து அம்சங்களையும் முன்னேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்
9. வெளிநாடுகளுடன் கலாசார உறவுகளைப் பேணுதல்

**நிரல் II**

**திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழுள்ள சகல பல்கலைக்கழகங்களும்
3. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழுள்ள சகல பட்டப்பின்படிப்பு நிறுவனங்களும் ஏனைய நிறுவனங்களும்
4. புத்த சிராவக்க பிக்குகள் பல்கலைக்கழகம்
5. பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம்
6. இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகம்
7. மகாபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்
8. கலாசார அலுவல்கள் திணைக்களம்
9. தேசிய நூதனசாலைத் திணைக்களம்
10. தொல்பொருளியல் திணைக்களம்
11. டவர் ஹோல் மண்டப தியேட்டர் மன்றம்
12. பகிரங்க அரங்காட்டுகைச் சபை
13. தேசிய அரங்கேற்றற் கலை நிலையம்
14. தேசிய கலை மன்றம்
15. கிராமோதய ஜனகலா மன்றம்
16. அபே கம
17. தேசிய சுவடிக்காப்புத் திணைக்களம்
18. மத்திய கலாச்சார நிதியம்
19. வரை. அரச அச்சகக் கூட்டுத்தாபனம்

**நிரல் III**

**நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்**

- (1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க) பல்கலைக்கழகச் சட்டம்
- (1996ஆம் ஆண்டின் 26ஆம் இலக்க) புத்த சிராவக்க பிக்கு பல்கலைக்கழகச் சட்டம்
- (1981ஆம் ஆண்டின் 74ஆம் இலக்க) இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகச் சட்டம்
- (1995 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க) இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்விக் கட்டளைச் சட்டம்
- (1981 ஆம் ஆண்டின் 66 ஆம் இலக்க) மகாபொல உயர் கல்வி புலமைப்பரிசில் கட்டளைச் சட்டம்
- (1988 ஆம் ஆண்டின் 73 ஆம் இலக்க) கலாசார சொத்துக்கள் சட்டம்
- 1978ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க) டவர் மண்டப அரங்கு நிதியச் சட்டம்
- (1952 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க) இலங்கை கலைச் சபைப் பேரவைச் சட்டம்
- சிகிரியா மரபுரிமை மன்றச் சட்டம் (1998 ஆம் ஆண்டின் 62 ஆம் இலக்க)
- (1940 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க) தொல்பொருளியல் கட்டளைச் சட்டம்
- தேசிய சுவடிக்காப்புச் சட்டம் (1973 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க)
- (1980 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க) மத்திய கலாச்சார நிதியச் சட்டம்
- (1971 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க) அரச திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டம்
- வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டு வரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும்

| நிரல் I<br>கடமைகளும் பணிகளும் | நிரல் II<br>திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் | நிரல் III<br>நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் |
|---|---|---|
| 10. கலாசார மற்றும் தொல்பொருளியல் மரபுரிமைகளுக்குப் பங்கம் ஏற்படாத வாறு கலாசாரத்தின் அடிப்படையிலான சுற்றுலா நிகழ்ச்சித் திட்டங்களை மேம்படுத்துவதற்குத் தேவையான ஒத்துழைப்புகளை வழங்குதல் | | |
| 11. சிங்கள கலைக் களஞ்சியம், சிங்கள அகராதி மற்றும் மகாவம்சம் என்பவற்றை வகுத்தமைப்பதற்காக தொடர் நடவடிக்கைகளை எடுத்தல் | | |
| 12. இனங்களுக்கிடையில் ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்காக கலாசாரத்தின் பங்களிப்பைப் பயன்படுத்தும் போக்குகளை இனமறிந்து அவற்றை நடைமுறைப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் | | |
| 13. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தொல்பொருள் மற்றும் கலாசார மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் | | |
| 14. நவீன மற்றும் பாரம்பரிய முறைப்படியான கலை ஆக்கங்களை மேம்படுத்துவதற்கும் கலைநுட்பவியலாளர்களை ஊக்குவிப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் | | |
| 15. நாடக, சங்கீத மற்றும் நடனத் துறைகளின் முன்னேற்றத்திற்குரிய வழிவகைகளை இனமறிந்து செயற்படுத்துதல் | | |
| 16. அரச ஆவணங்களின் விதிமுறையான முகாமையும் பேணுகையும் | | |
| 17. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்குரியதான செயற்பாடுகள் | | |
| 18. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |